### பா.ஜ.க.வை நேருக்கு நேர் எதிர்த்து நிற்கும் ஒரே தலைவர், இந்தியாவிலேயே நம் தலைவர் மட்டும்தான்:

# அ.தி.மு.க.வுக்கு என்று எந்தவிதமான கொள்கையும் கிடையாது! இன்று பா.ஜ.க.வின் குரலாகவே அ.தி.மு.க. மாறியிருக்கிறது!

## கிருஷ்ணகிரியில், நடைபெற்ற சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மார்ச். 16-

**கிருஷ்ணகிரியில், நடைபெற்ற கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழகங்களின் சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், பா.ஜ.க.வை நேருக்கு நேர் எதிர்த்து நிற்கின்ற ஒரே தலைவர் இந்தியாவிலேயே நம் தலைவர் அவர்கள் மட்டும்தான். இப்போது அ.தி.மு.க. என்கிற கட்சி கிட்டத்தட்ட பாதி பா.ஜ.க.வாக மாறிவிட்டது. அ.தி.மு.க.வுக்கு என்று எந்தவிதமான கொள்கையும் கிடையாது. இன்று பா.ஜ.க.வின் குரலாக அ.தி.மு.க. மாறியிருக்கிறது. பாசிஸ்டுகளையும் அடிமைகளையும் வரும் சட்டமன்றத் தேர்தலில் வீழ்த்தியாக வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சார்பு அணிகளின் நிர்வாகிகளான, உங்களையெல்லாம் பல்வேறு நிகழ்ச்சிகளில் தனித்தனியாகப் பல சந்தர்ப்பங்களில் சந்தித்திருந்தாலும், இன்று கழகத்தின் அனைத்து அணிகளும் ஒரே இடத்தில் ஒரே அரங்கில் நாம் அனைவரும் சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்கு முதலில் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சிறப்பாக ஏற்பாடுகள்!**

கடந்த மூன்று நாட்களாக, கடலூர், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, தர்மபுரி எனத் தொடர் நிகழ்ச்சிகளை நடத்தி விட்டு, இன்று கிருஷ்ணகிரிக்கு உங்களையெல்லாம் பார்க்க வந்திருக்கிறேன். முதலில் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும், நம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் அண்ணன் மதியழகன், மேற்கு மாவட்டச் செயலாளர் அண்ணன் ஒய்.பிரகாஷ் அவர்களுக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில், இரண்டே நாட்களில் இவ்வளவு சிறப்பான ஏற்பாடுகளை, எழுச்சியான ஏற்பாடுகளைச் செய்து சிறப்பித்துள்ளார்கள். அது அரசு நலத்திட்ட உதவி நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, இந்தச் சார்பு அணி நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்த குறுகிய கால அறிவிப்பில் வந்திருந்த உங்களுக்கும் என் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இளம் தலைமுறையினர், கழகம் நோக்கி...

இரண்டு மாவட்டக் கழகச் செயலாளர்களும் இன்று போட்டி போட்டுக்கொண்டு ஒட்டுமொத்த மாவட்டத்தையும் மிகச் சுறுசுறுப்பாக வைத்துள்ளார்கள் என்று சொன்னால் மிகையாகாது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் இன்று ஏராளமான இளைஞர்கள், இளம் தலைமுறையினர் நம் கழகத்தை நோக்கி வர ஆரம்பித்துள்ளார்கள். அந்த அளவுக்கு இந்த மாவட்டத்தில் இளைஞர்களுடன் இந்த மாவட்டம் மிகவும் நெருக்கமாக உள்ளது.

பவள விழா முடிந்து எழுபத்தி ஐந்து ஆண்டுகளை முடித்து இன்று தி.மு.க-வின் வயது 76. இந்த எழுபத்தி ஆறு வயதிலும் அதே ஆற்றலுடன் இளமையோடும் நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய கழக நிர்வாகிகள் நீங்கள்தான் மிக மிக முக்கியமான ஒரு காரணம். கலைஞரைப் பற்றி சொல்லும்போது பெருமையாகச் சொல்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் சில தேர்தல்களில் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கும், ஆனால் கலைஞருக்கு இருக்கக்கூடிய பெருமை என்ன தெரியுமா? தான் சந்தித்த அத்தனை தேர்தலிலும் வெற்றி பெற்ற ஒரே தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதே மாதிரி நம் தலைவருக்கு ஒரு பெருமை உண்டு. தான் தலைவராகப் பொறுப்பேற்ற பின்பு நம் இயக்கம், நம் கழகம் சந்தித்த அத்தனை தேர்தலிலும் வெற்றியையும் மட்டுமே கொடுத்திருக்கக்கூடிய தலைவர் நம் தலைவர். இவர்கள் இரண்டு பேரின் வெற்றிக்கு முழுமுதற்காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகளாகிய உங்களின் உழைப்புதான். இன்றைக்கும் நம் கழகம் களத்தில் வலிமையாக நிற்கிறது என்றால், அதற்கு காரணம் உங்களின் உழைப்புதான்.

சார்பு அணிகள் சந்திப்பு என்று நாம் சொல்கிறோம். பெயரில்தான் சார்பு அணி, அதற்காக தலைமை கழகத்தின் மேல் நாம் சார்ந்திருக்கிறோம் என்று அர்த்தம் கிடையாது. அதை நாம் மாற்றிக் காட்ட வேண்டும். தாய்க்கழகம் நம்மைச் சார்ந்து, நம் அணிகளின் உழைப்பைச் சார்ந்து அவர்கள் இருக்க வேண்டும். நாம் அந்த நிலைமையை மாற்றிக் காட்ட வேண்டும். ஒரு அணியில் எடுத்த உடனே முக்கியமான போட்டியில் விளையாட விடமாட்டார்கள். அதற்கு முன்னால் நமக்கு விளையாடத் தெரிகிறதா இல்லையா என்று பயிற்சி எடுப்பதற்கு வலைப் பயிற்சி- 'நெட் பிராக்டிஸ்' கொடுப்பார்கள். அது மாதிரி தாய்க்கழகத்தில் பணியாற்றுவதற்கு முன்பு நமக்கெல்லாம் கிடைத்துள்ள ஒரு பயிற்சி வாய்ப்புதான் இந்தச் சார்பு அணிகளில் பணியாற்றக் கூடிய அந்த வாய்ப்பு.

**கழகத்தின் மாணவர் அணி**

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சார்பு அணிகளில் சிறப்பாகச் செயல்பட்டவர்கள் இன்று தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்று சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, மாவட்ட பொறுப்பாளர்களாக, மாவட்டச் செயலாளர்களாக, அமைச்சர்களாக இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏன், இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சரையும் கழகத்தின் தலைவரையும் கொடுத்தது கழகத்தின் இளைஞர் அணிதான். கழகத்தின் பொதுச் செயலாளரைப் பயிற்சி கொடுத்து அனுப்பியது கழகத்தின் மாணவர் அணிதான். எனவே நாம் சார்பு அணிதானே என்று அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. யாரும் சாதாரணமாக நினைத்து விடக்கூடாது. உங்களுக்கெல்லாம் ஓர் உறுதிமொழியை, இந்த நேரத்தில் நான் தருகிறேன். சார்பு அணியில் இருக்கக்கூடிய நீங்கள் சிறப்பாகச் செயல்பட்டீர்கள் என்றால், உங்களுக்கான அங்கீகாரத்தைச் சரியான நேரத்தில் நம் தலைவர் அவர்கள் நிச்சயம் உங்களுக்குக் கொடுப்பார்.

இன்று அந்தத் தைரியத்துடன்தான் நாம் அனைவரும் மக்களைச் சந்திக்கச் சென்றுள்ளோம். கடந்த ஐந்து ஆண்டுகளில், நிச்சயம் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் நம் திராவிட மாடல் அரசின், ஏதாவது ஒரு திட்டத்தில் நிச்சயம் பயன்பெற்றிருப்பார்கள். ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற திட்டங்களை நாம் முதலில் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். ஏராளமான திட்டங்களைச் செய்துள்ளோம். மிகவும் முக்கியமான திட்டங்களை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**விடியல் பயணத் திட்டம்**

நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவர் போட்ட முதல் நாள் முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டக் கையெழுத்து. ஒவ்வொரு மகளிரும் இந்த விடியல் பயண திட்டத்தின் மூலம் மாதம் சுமார் 900 ரூபாய் வரை சேமித்துள்ளார்கள். 920 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இன்று திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை தினமும் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் பயன் பெற்று வருகிறார்கள்.

அரசு பள்ளியில் படித்து எந்தக் கல்லூரிக்குச் சென்று படித்தாலும் சரி, தனியார் கல்லூரியாக இருந்தாலும், எந்தப் படிப்பிற்குச் சென்றாலும் சரி, அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டத்தின் வாயிலாக நம் முதலமைச்சர் கொடுத்துள்ளார். தமிழ்ப் புதல்வன், புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக இன்று 12 லட்சம் மாணவ மாணவிகள் பயன் பெற்றுள்ளார்கள்.

இப்போது சமீபத்தில் 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தையும் அறிவித்து, ஒரே மாதத்தில் 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு நாம் வழங்கியுள்ளோம்.

**மகளிர் உரிமைத் தொகை**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் வழங்கியுள்ளார். இந்தத் திட்டத்தைத் தேர்தலைக் காரணம் காட்டி எப்படியாவது நிறுத்த வேண்டும், ஒரு மூன்று நான்கு மாதங்களுக்கு நிறுத்தி வைக்கலாம். ஏனெனில் பல மாநிலங்களில் நீதிமன்றத்துக்குச் சென்று இந்தத் திட்டத்தை நிறுத்தியுள்ளார்கள். அதற்குச் சில 'சங்கி' கூட்டத்தினர் முயற்சியில் ஈடுபட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட நம் தலைவர் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் சேர்த்து ஆயிரம் மூவாயிரம் ரூபாய், அத்துடன் சேர்த்து கோடைக் கால சிறப்பு நிதியாக இரண்டாயிரம் ரூபாய் என ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு ஐயாயிரம் ரூபாயை ஒரே பரிமாற்றத்தில் அனுப்பி வைத்தார்.

இதை விடக் கூடுதலாக நம் முதலமைச்சர் இன்னொரு உறுதிமொழி கொடுத்துள்ளார். இப்போது வரை உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் கொடுத்து வருகிறோம், மீண்டும் நம் திராவிட முன்னேற்ற கழக ஆட்சி அமைந்தவுடன் 2.0 ஆட்சியில் உரிமைத் தொகையை ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தித் தருவேன் என்ற வாக்குறுதியை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். விளிம்பு நிலை மக்கள், மாற்றுத் திறனாளிகள், கைம்பெண்கள், மூத்த குடிமக்கள் என 38 லட்சம் பேருக்குச் சிறப்பு உதவித் தொகையாக இரண்டாயிரம் ரூபாயையும் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்.

இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்.

ஓசூர் மாநகராட்சியில் 582 கோடி ரூபாய் செலவில் பாதாள சாக்கடை திட்டம், 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர் திறன் பூங்கா, விவசாயிகளுக்கு 73,000 கட்டணமில்லா மின் இணைப்புகள், ஓசூர் தலைமை அரசு மருத்துவமனையில் 100 ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டமைப்புகள், 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாகலூர் புறவழிச் சாலை அமைத்து கொடுத்திருக்கிறோம்.

70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பையூர் தோட்டக் கலை கல்லூரி, 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி நகராட்சி பாதாள சாக்கடை திட்டம், 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூர் ஜீஜுவாடி தொழிற் கூட வளாகம் மற்றும் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிபுரியும் பெண்களுக்குத் 'தோழி' விடுதி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இப்படி தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதால்தான், இன்று நம் தமிழ்நாடு இந்தியாவிலேயே வளர்ந்து வருகின்ற மாநிலங்களில், முதல் முறையாக இரட்டை இலக்க வளர்ச்சியுடன் 11.19 சதவிகிதத்துடன் இன்று நம் தமிழ்நாடு முதல் இடத்துக்கு வந்துள்ளது. ஆனால் இவற்றையெல்லாம் பொறுக்காத ஒன்றிய பா.ஜ.க அரசு நம் அரசுக்கு இன்று பல்வேறு வகையில் இடையூறுகளைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். கல்வி உரிமையைப் பறிக்கிறார்கள், மொழி உரிமையைப் பறிக்கிறார்கள், நிதி உரிமையைப் பறிக்க முயற்சி செய்கிறார்கள். ஒட்டுமொத்த மாநில உரிமைகளையும் ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து பறித்துக் கொண்டே இருக்கிறது.

**ஏற்றுக்கொள்ள மாட்டோம்**

ஒன்றிய அரசு சென்ற வருடம் புதிய கல்வி கொள்கையைக் கொண்டு வந்தது. மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டன, ஆனால் நம் தலைவர் சொன்னார், ``இந்த புதிய கல்வி கொள்கையை ஏற்றுக்கொண்டால் மீண்டும் தமிழ்நாட்டுக்குள் குறுக்கு வழியில் ஹிந்தியையும் சமஸ்கிருதத்தையும் நீங்கள் நுழைக்கப் பார்க்கிறீர்கள். மீண்டும் தமிழ்நாட்டுக்குள் குலக் கல்வி திட்டத்தைக் கொண்டு வரப் பார்க்கிறீர்கள். அதனால் எந்த நேரத்திலும் புதிய கல்வி கொள்கையை ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்றார்.

ஒன்றிய அரசு கல்வி நிதியைப் எல்லா மாநிலத்துக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டார்கள். தமிழ்நாட்டுக்கு மட்டும் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார்கள். இந்த ஆண்டோடு 3,200 கோடி தர வேண்டும். நீங்கள் புதிய கல்வி கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் அந்த நிதியைக் கொடுப்போம் என்று ஒன்றிய அரசு சொல்கிறது. ஆனால் நம் தலைவர் சொல்லிவிட்டார், "நீ பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் உன் புதிய கல்வி கொள்கையைத் தமிழ்நாட்டுக்குள் நான் நுழைய விடமாட்டேன். மீண்டும் தமிழ்நாட்டுக்குள் இந்தி திணிப்பை அனுமதிக்க மாட்டேன், மீண்டும் தமிழ்நாட்டுக்குள் குலக் கல்வி திட்டத்தைக் கொண்டு வரமாட்டேன், மும்மொழி கொள்கையை அனுமதிக்க மாட்டேன்" என்று சொன்ன ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர்.



பா.ஜ.க. தமிழ்நாட்டுக்குள் கொல்லைப்புறமாக வர முயற்சி செய்கிறார்கள். ஈ.டி, சி.பி.ஐ, தேர்தல் ஆணையம் என நம் சார்பு அணிகள் மாதிரி, இவையெல்லாம் பா.ஜ.க-வின் சார்பு அணிகள். நாம் எப்படித் தேர்தல் வேலையில் இறங்கியுள்ளோமோ பா.ஜ.க தன் சார்பு அணிகளை வைத்துத் தேர்தல் வேலையில் இறங்கியுள்ளது. நம்மை மிரட்டப் பார்த்தார்கள் ஆனால் இந்த சி.பி.ஐ, ஈ.டி, ஐ.டி இவர்களின் மிரட்டலுக்கெல்லாம் பயப்படுகிற ஆள் தி.மு.க கிடையாது.

**கட்டாய கூட்டணி**

இவர்களையெல்லாம் வைத்து மிரட்டி உருவாக்கிய ஒரு கட்டாய கூட்டணிதான் இன்று அதிமுக கூட்டணி. பத்து நாட்களுக்கு முன்பு மதுரைக்கு மோடி வந்திருந்தார். அங்கே மோடி அவர்களுக்குப் பிடிக்காது என்று சொல்லி அ.தி.மு.க-வின் மேடையில் வைத்திருந்த பெரியார் படத்தை அன்று அகற்றினார்கள். பத்து நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்டது பெரியார் படம், ஆனால் நேற்று முன்தினம் திருச்சியில் எடப்பாடி பழனிசாமி படத்தையே எடுத்துவிட்டார்கள். நான் சொல்கிறேன் நிச்சயமாக வரும் சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க என்கிற கட்சியே தமிழ்நாட்டில் இருக்காது. அ.தி.மு.க-வைப் பா.ஜ.க விழுங்கிவிடும்.

பா.ஜ.க-வை நேருக்கு நேர் எதிர்த்து நிற்கின்ற ஒரே தலைவர் இந்தியாவிலேயே நம் தலைவர் அவர்கள் மட்டும்தான். இப்போது அ.தி.மு.க என்கிற கட்சி கிட்டத்தட்ட பாதி பா.ஜ.க-வாக மாறிவிட்டது. அ.தி.மு.க-வுக்கு என்று எந்த விதமான கொள்கையும் கிடையாது. இன்று பா.ஜ.க-வின் குரலாக அ.தி.மு.க. மாறியிருக்கிறது. பாசிஸ்டுகளையும் அடிமைகளையும் வரும் சட்டமன்ற தேர்தலில் வீழ்த்தியாக வேண்டும்.

நம்மிடம் நம் திராவிட மாடல் அரசின் சாதனைகள் உள்ளன, கொள்கைகள் உள்ளன இதையெல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் அடுத்து வர இருக்கின்ற இந்த ஒரு மாதம் குறைந்தபட்சம் ஒரு 50, 60 பேரை நேரில் சந்தித்து உங்களின் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களுடன் நேரடித் தொடர்பில் இருக்க வேண்டும். அவர்களின் குறைகளைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும். ஒரு 60 வாக்குகள் உங்கள் கட்டுப்பாட்டில் இருந்தது என்றால் உங்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்கவோ தவிர்க்கவோ நிச்சயமாக முடியாது.

இன்று 13, 16-ஆம் தேதி தேர்தல் அறிவிப்பதாகச் செய்திகள் வருகின்றன. எனக்கு என்னவோ வருகின்ற ஏப்ரல் மாதம் பதினைந்திலிருந்து இருபது தேதிக்குள் தேர்தல் இருக்கும் என்று தோன்றுகிறது. நம் கைகளில் வெறும் 35 நாட்கள்தான் இருக்கிறது. தி.மு.க காரனை எப்போதுமே சொல்லுவார்கள். சிங்கிள் டீயைக் குடித்துவிட்டு இரவும் பகலும் வேலை பார்க்கிறான் என்று. அதை இப்போது நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் இந்தத் தேர்தல் காலத்தில் நாம் இருக்கிறோம். உங்களுக்குள் வேலைகளைப் பிரித்துக் கொள்ளுங்கள். இளைஞர் அணி இளைஞர்களை ஈர்க்கின்ற வகையில் களத்தில் இறங்கி பல்வேறு பேணிகளை நாங்கள் செய்கிறோம்.

**தகவல் தொழில்நுட்ப அணி**

இங்கு மாணவர் அணியைச் சேர்ந்தவர்கள் மாணவர்களை சந்தித்து 5 வருடத்தில் என்னென்ன திட்டங்களை கொண்டு வந்துள்ளோம் என்பதை அவர்ளிடம் பேசுங்கள்.

தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்தவர்கள் ஏற்கனவே சமூக வலைகதளங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகிறீர்கள். இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசின் சாதனைகளை நீங்களே ஃபோட்டோ கார்டுகளாக வடிவமைத்து பகிருங்கள். நீங்களே பேசிச் சின்னச் சின்ன காணொலிகளை யூடியூப்பில் பதிவேற்றுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஓர் ஊடகமாகச் செயல்பட வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு யூடியூப் சேனல் நடத்த வேண்டும்.

சட்டத்துறையில், 'லீகல் விங்' வந்திருப்பீர்கள். தேர்தல் என்று வந்துவிட்டால், சட்டத்துறை எவ்வளவு முக்கியம் என்று நம் அனைவருக்குமே தெரியும். வேட்புமனுத் தாக்கலிலிருந்து வாக்கு எண்ணிக்கை, அதற்குப் பிறகு சான்றிதழ் வாங்குவது வரை உங்களின் பணி மிக முக்கியமான ஒரு பணி.

சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்தவர்கள் வந்திருப்பீர்கள். இன்று அடிமை அ.தி.மு.க-வும் பாசிச பா.ஜ.க-வும் சேர்ந்து சிறுபான்மை மக்களை எப்படியெல்லாம் நோகடிக்கிறார்கள் என்பதை அவர்களிடம் எடுத்துக்கொண்டு நீங்கள் சேருங்கள்.

மருத்துவ அணி, பொறியாளர் அணி நீங்கள் எல்லாம் வந்திருப்பீர்கள். உங்களுக்கு ஒரு வாட்ஸ்அப் குழு உருவாக்கி, உங்களின் நண்பர்களைச் சேர்த்து அவர்களுடன் நம் அரசின் திட்டங்களைப் பகிருங்கள்.

விவசாய அணியைச் சேர்ந்தவர்கள் நம் அரசு விவசாயிகளுக்குச் செய்கின்ற நலத்திட்டங்களை அவர்களிடம் சொல்லுங்கள். ஏனெனில், விவசாயத்திற்கென்று வரலாற்றிலேயே தனிப் பட்ஜெட் போட்டது, நம் திராவிட மாடல் அரசுதான். இதை மக்களிடம் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும்.

இங்கே ஒரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட்டு ஆகவேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கென்று நம் அரசு அறிவித்த `நாலெட்ஜ் காரிடர்' பற்றி இப்போது சில தவறான வதந்திகளைச் சிலர் பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓர் ஐ.டி காரிடர் உருவாக்க வேண்டும், இன்னும் சொல்லப்போனால் பெங்களூருக்கு இணையாக ஓசூர் உள்ளிட்ட பகுதிகளை நாம் மேம்படுத்த வேண்டும் வளர்த்தெடுக்க வேண்டும் என்று 'நாலேட்ஜ் காரிடர்' திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**தெளிவாக சொல்லிவிட்டார்**

இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டதே தவிர, எந்தப் பணிகளையும் நாம் தொடங்கவில்லை. ஆனால் அதற்குள் சில பேர் இந்தத் திட்டத்துக்காக இங்கே இருக்கக்கூடிய சாலையின் இருபுறமும் சுமார் ஒரு கிலோமீட்டர் வரை நிலம் எடுக்கப்படும் என்று ஒரு தவறான பொய்யான தகவலைப் பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாகக் கிளவரப்பள்ளி அணையின் பாசனப் பகுதியில் இந்தத் திட்டம் வரப்போகிறது என்று ஒரு பொய் செய்தியை, வதந்தியை எதிர்க்கட்சிகள் பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். இது பற்றி இந்த மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய மக்கள், பொதுமக்கள், நம் அமைச்சர் சக்கரபாணி அவர்களும் உங்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்டக் கழகச் செயலாளரும் நம் முதலமைச்சரைச் சமீபத்தில் வந்து சந்தித்தார்கள், நானும் அந்த கூட்டத்தில் இருந்தேன்.

அவர்களின் கருத்துக்களைச் சொன்னார்கள், இந்த மாதிரி ஒரு தவறான விஷயத்தைப் பரப்பிக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் நம் முதலமைச்சர் மிகத் தெளிவாக அவர்களிடம் சொன்னார், ``கிருஷ்ணகிரி மாவட்ட பொதுமக்கள், விவசாய மக்களைப் பாதிக்கிற மாதிரி எந்த ஒரு திட்டத்தையும் நம் அரசு கொண்டு வராது"என்று உடனடியாகச் சொன்னார். இதை மீண்டும் நாம் அழுத்தத் திருத்தமாக மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். ஆகவே இந்தத் தகவலைப் பொதுமக்களிடம் அடுத்த 30 நாட்கள் நீங்கள் சேர்க்க வேண்டும். யாராவது இதைச் சொன்னார்கள் என்றால், "கிடையாது இந்தத் திட்டம் வரவில்லை, முதலமைச்சரே சொல்லியிருக்கிறார்" என்று ஆணித்தரமாக எடுத்துச் சொல்லுங்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு ஆதிதிராவிடர் நலக்குழுவைச் சேர்ந்த தோழர்கள் நீங்கள் வந்திருக்கிறீர்கள். ஆதிதிராவிடர்கள், பழங்குடியின மக்களின் முன்னேற்றத்துக்கு நம் அரசு என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது, அம்பேத்கர் அயலகக் கல்வி உதவித் தொகைத் திட்டம் எனப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறோம்.

**300 வீரர்களுக்கு அரசு வேலை**

விளையாட்டு மேம்பாட்டு அணியைச் சேர்ந்த சகோதரர்கள் வந்திருப்பீர்கள், விளையாட்டுக்கு நம் அரசு என்னென்ன செய்துள்ளது என்பதை அடித்துச் சொல்லுங்கள். ஏன், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே விளையாட்டுத் துறைக்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் மிகப்பெரிய சாதனைகளைச் செய்து காட்டியிருக்கிறோம். விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு 3 சதவிகித இட ஒதுக்கீடு உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் அ.தி.மு.க ஆட்சியில் 2 விளையாட்டு வீரர்களுக்குதான் அரசு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் நம் தலைவர் 300 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். ஒவ்வொரு கிராமத்துக்கும் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கியுள்ளோம். பல்வேறு தொகுதிகளில் மினி ஸ்டேடியம் தயார் செய்து கொடுத்துள்ளோம். பல உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி கொடுத்துள்ளோம்.

இந்த மாவட்டத்தில் கூட, தளி, பர்கூர் தொகுதிகளில் முதலமைச்சர் மினி ஸ்டேடியம் கட்டப்பட்டுள்ளது. ஒன்றரை கோடி ரூபாய் செலவில் பாரா ஸ்போர்ட்ஸ் மைதானம் அமைக்கப்பட்டு வருகிறது. 48 லட்சம் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் புதிய உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் விளையாட்டு வீரர்களிடம் சொல்லுங்கள்.

வர்த்தக அணி நிர்வாகிகள் வந்திருக்கிறீர்கள். உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய வியாபாரிகள், கடை உரிமையாளர்களிடம் எல்லாம் நம் அரசு வணிகர்களின் நலன் காக்கின்ற அரசு என்பதைக் கொண்டு சேருங்கள். அமைப்பு சாரா ஓட்டுநர் அணியைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறீர்கள். ஓட்டுநர்கள் குறிப்பாக ஆட்டோ ஓட்டுநர்கள் தினமும் அதிகமான மக்களை நேரடியாகச் சந்திப்பவர்கள், அவர்களோடு உரிமையைப் பேசக்கூடியவர்கள். ஆகவே மக்களிடம் நம் அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லச் சொல்லுங்கள். உங்களின் வாகனங்கள், ஆட்டோக்களில் கழக அரசின் சாதனைகளை மக்களுக்குத் தெரிகிற மாதிரி விளம்பரப்படுத்துங்கள்.

**கவனமாகப் பேசுங்கள்**

மகளிர் அணி வந்திருக்கிறீர்கள், மற்ற அணிகள் எல்லாம் வீட்டு வாசல் வரைதான் பிரச்சாரம் செய்ய முடியும், மகளிர் அணிக்கு ஒரு பெரிய சாதகமான அம்சம் உள்ளது. என்னவென்றால், வீட்டுக்குள்ளே சமையல் கூடம் வரை சென்று உங்களின் பிரச்சாரத்தைப் செய்யலாம் அந்த அளவுக்கு உங்கள் மேல் நம்பிக்கை வைத்துள்ளார்கள் பொதுமக்கள்.

பொதுமக்களிடம் பேசும்போது மிகுந்த கண்ணியத்துடன் கவனமாகப் பேச வேண்டும். ஏதாவது ஒரு வார்த்தை தவறாகப் பேசிவிட்டோம் என்றால் முடித்து விடுவார்கள், இன்று எல்லார் கையிலும் கைபேசி உள்ளது, எல்லாருமே ஒரு தொலைக்காட்சி சேனல் மாதிரி ஆகிவிட்டார்கள்.

இன்று செய்தித் தொலைக்காட்சிகள் எல்லாம் காத்துக்கொண்டு இருக்கிறார்கள், நிர்வாகிகள் ஏதாவது தவறாகப் பேசிவிட மாட்டார்களா, தவறான வார்த்தைகளைச் சொல்ல மாட்டார்களா, அதை வைத்து. இந்த அரசுக்கும் முதலமைச்சருக்கும் நம் இயக்கத்துக்கும் ஏதாவது ஒரு கெட்ட பெயர் ஏற்படுத்த முடியாதா என்று காத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே வந்திருக்கக்கூடிய நாம் மிகவும் பொறுமையோடு நம் திட்டங்களைப் பற்றி மட்டும் பேசுங்கள், மக்களோடு நெருங்கிய தொடர்பில் இருங்கள். எந்தக் கழகப் பணி செய்தாலும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களிடம் அனுமதி வாங்கி கலந்து ஆலோசனை செய்து அதன் பிறகு உங்களின் பணிகளை நீங்கள் செய்யுங்கள்.

இங்கே ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் வந்துள்ளார்கள், அவர்களிடம் உங்கள் சார்பாக, அணிகளின் சார்பாக எங்களின் கோரிக்கை. அணிகளில் இருக்கக்கூடிய பலர் இன்று புதிதாக அரசியலுக்கு வந்தவர்களாக இருப்பார்கள், புதிய தலைமுறை வந்திருப்பார்கள். முதல் தலைமுறை அரசியல்வாதிகளாக இருப்பார்கள், அவர்களுக்கு அந்த அளவுக்குப் பெரிய அனுபவம் இருக்காது. அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ ஆர்வக் கோளாறில் ஏதாவது ஒரு சின்ன தவறு செய்துவிட்டால்கூடத் தயவு செய்து அவர்களைத் தண்டித்துவிடாதீர்கள், அவர்களை நீங்கள் வழிநடத்துங்கள். எந்தப் பணியை எப்படிச் செய்ய வேண்டும், எப்படி மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும் என்று நீங்கள் அவர்களுக்கு உத்தரவு போடுங்கள். ஏனெனில், உங்களுக்கு அந்த அனுபவம் இருக்கும், அணிகளோடு பணியாற்றிய அனுபவம், மக்கள் பணியாற்றிய அனுபவம் இருக்கும். ஏதாவது சின்ன தவறு செய்தால் அதை மன்னித்து விட்டுவிடுங்கள். எனவே இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு நிர்வாகியும் ஒரு விஷயத்தை உறுதி செய்ய வேண்டும். நம் பகுதியில் நம் வாக்கு எங்கே இருக்கிறதோ, நாம் எங்கே இருக்கிறோமோ, உங்களின் ஒவ்வொருவரின் பகுதியிலும் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் அதிகமான வாக்குகளை நாம் பெற வேண்டும். முன்னிலை வர வேண்டும் அதை முதலில் நாம் உறுதி செய்ய வேண்டும்.

**நானும் உங்கள் அணிதான்**

இங்கு வந்திருப்பவர்கள் அத்தனை பேருக்கும் நான் மீண்டும் சொல்லிக்கொள்வது, இந்த நிகழ்ச்சிக்கு நான் ஒரு துணை முதலமைச்சராகவோ விளையாட்டுத்துறை அமைச்சராகவோ சட்டமன்ற உறுப்பினராகவோ வரவில்லை, நானும் உங்கள் அணிதான், நானும் ஓர் அணியின் செயலாளர்தான். அந்த உரிமையுடன் மற்ற அணிகளையெல்லாம் பார்த்து, உங்களை ஒரு உரிமையோடு இந்தப் பிரச்சாரத்தை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்று உங்களிடம் சொல்ல வந்திருக்கிறேன். நம் அணிகளுக்குள் அடுத்த 40 நாட்கள் நமக்குள் ஓர் ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் எந்த அணியின் வேலை, பணி வரும் சட்டமன்றத் தேர்தலுக்கு நமக்கு மிகவும் உதவியாக இருந்தது, நம் வெற்றிக்கு மிகவும் உதவியாக இருந்தது என்கிற ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும்.

நாம் இன்று போட்டி போடுவோம். இளைஞர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மாணவர் அணி என்று பெயரால் பிரிந்து இருக்கிறோம். ஆனால், நாம் அனைவரும் ஒரே அணி, அது கலைஞர் அணி, நம் தலைவர் அணி. அது மட்டும் தான் நம் எண்ணத்தில் இருக்க வேண்டும். எனவே இதை மனதில் வைத்துக்கொண்டு வேலை செய்யுங்கள்.

**படைப்போம் வரலாறு**

நம் தலைவர் 'வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று சொல்லியிருக்கிறார். தலைவர் நமக்குக் கொடுத்திருக்கின்ற இலக்கு 200. ஆனால் நாம் களத்தில் இறங்கி வேலை பார்த்தோம் என்றால், கடந்த நான்கு நாட்களாகப் பல்வேறு மாவட்டங்களில் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு வந்திருக்கிறேன். மக்களைத் தினமும் சந்தித்துக் கொண்டு இருக்கிறேன். வாகனத்தில் செல்லும்போது பொதுமக்கள், தாய்மார்கள் அனைவரையும் சந்தித்துப் பேசிக்கொண்டு வருகிறேன்.

நான் சொல்கிறேன், நாம் நிச்சயம் கவனம் சிதறாமல் நம் தேர்தல் பணியை, பிரச்சார பணியைச் செய்தோம் என்றால் 200 அல்ல, 234 தொகுதிகளிலும் நாம் ஜெயித்துக் காட்டுவோம். மீண்டும் நிரூபித்துக் காட்டுவோம், தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்குக் அவுட் ஆப் கண்ட்ரோல் என்பதை நிரூபித்துக் காட்டுவோம். தமிழ்நாடு நம் தலைவர் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டுவோம்.

வரவிருக்கக்கூடிய தேர்தல் 'தமிழ்நாடு vs டெல்லி' தேர்தல். நாம் 40 நாட்கள் செய்கின்ற வேலை அடுத்த ஐந்து வருட தமிழ்நாட்டின் எதிர்காலத்தை உங்களின் 40 நாட்கள் பணி உறுதி செய்யப்போகிறது.

சென்ற முறை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆறு தொகுதிகளில் மூன்று தொகுதிகளில் நாம் வெற்றிப் பெற்றோம். ஆனால், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, வேப்பனப்ஹள்ளி இந்த மூன்று தொகுதிகளை நாம் தவறவிட்டுவிட்டோம். இந்த முறை சட்டமன்ற தேர்தலில் கிருஷ்ணகிரி மாவட்டம் 'சிக்ஸர்' அடிக்க வேண்டும். ஆறு தொகுதிகளிலும் நீங்கள் வெற்றிப்பெற வைத்து காட்ட வேண்டும்.

உதயசூரியனின் வெற்றிக்குச் சார்பு அணிகள் சிறப்பாகப் பணியாற்றினார்கள் என்ற செய்தி தலைவருக்குச் செல்ல வேண்டும். உதயசூரியன் என்றால், ஏதோ சுவரில் வரைந்து வைக்கின்ற சின்னம் கிடையாது. நம் உயிரோடு, உணர்வோடு கலந்திருக்கக்கூடிய சின்னம் உதயசூரியன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்டெடுத்த சின்னம் உதயசூரியன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக்காத்த சின்னம் உதயசூரியன். கழகத் தலைவர் அவர்களால் வெற்றியை மட்டுமே பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய சின்னம் உதயசூரியன். நம் வெற்றி சின்னம் உதயசூரியன்.

அதை மனதில் வைத்துக்கொண்டு தேர்தல் பணியில் ஈடுபடுங்கள். எனவே கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கப் போவது உறுதி. நம் தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் அமரப் போவது உறுதி. அதற்குச் சார்பு அணிகள் உங்களின் பணிகள் உறுதியாக இருக்க வேண்டும்.

எனவே உங்கள் அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்வது அடுத்த 40 நாட்கள் அயராது உழைப்போம். 'வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு', தலைவர் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.